# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - ஆறு - __________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது ________________

   அ) பசி + இன்றி ஆ) பசி + யின்றி இ) பசு + இன்றி ஈ) பசு + யின்றி

2. மாணவர்கள் நூல்களை ________________ கற்க வேண்டும்.

   அ) மேலோட்டமாக ஆ) மாசுற இ) மாசற ஈ) மயக்கமற

3. 'மானம் + இல்லா' – என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________________

   அ) மானம்இல்லா ஆ) மானமில்லா இ) மானமல்லா ஈ) மானம்மில்லா

4. நாம் ________________ சொல்படி நடக்க வேண்டும்.

   அ) இளையோர் ஆ) ஊரார் இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்

5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________________

   அ) சிறப்பு உடையார் ஆ) சிறப்புடையார்
   இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

6. 'காடு + ஆறு' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________________

   அ) காட்டாறு ஆ) கட்டாறு இ) காட்டுஆறு ஈ) காடுஆறு

7. தவறான சொல்லை எழுதுக. ________________

   அ) கண்டான் ஆ) வென்ரான் இ) நண்டு ஈ) வண்டு

8. 'கைப்பொருள்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

   அ) கையில் + பொருள் ஆ) கைப் + பொருள்
   இ) கை + பொருள் ஈ) கைப்புப் + பொருள்

9. மாணவர் பிறர் ________________ நடக்கக்கூடாது.

   அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி
   இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

10. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம் பெறாத சொல் எது? ________________

    அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கல்வி ஈ) தம்பி

**II. மனப்பாடப் பாடல்** 1 × 4 = 4

11. 'மூதுரை' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

12. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?
13. நாம் யாருடன் சேரக் கூடாது?
14. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?

15. எதை நம்பி வாழக் கூடாது?

16. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?

17. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** $3 \times 3 = 9$

18. இன எழுத்துகள் என்றால் என்ன?

19. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?

20. காமராசரின் மதிய உணவுத்திட்டம் குறித்து எழுதுக.

21. நாம் எவ்வாறு வாழ வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?

**V. நெடுவினா.** $1 \times 5 = 5$

22. அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

**VI. வினாக்களுக்கு ஏற்ப விடையளி.**

23. சொற்றொடரில் அமைத்து எழுதுக. $3 \times 1 = 3$

அ) வகுப்பு ஆ) உயர்கல்வி இ) சீருடை

24. இன எழுத்துகளை எடுத்தெழுதுக. $4 \times \frac{1}{2} = 2$

அ) தென்றல் ஆ) வண்டல் இ) சங்கம் ஈ) பம்பரம்

25. நிரப்புக. $3 \times 1 = 3$

அ) குளிர்ந்த காற்று ________________

ஆ) வளையில் இருப்பது ________________

இ) யானையிடம் உள்ளது ________________

26. பிழையான சொற்களை திருத்தி எழுதுக. $4 \times 1 = 4$

அ) தெண்றல் ஆ) கன்டம் இ) நன்ரி ஈ) மன்டபம்